International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# குறுந்தொகையில் சமூக பண்பாட்டு ஆய்வு நோக்கில் மருதப் பெண்கள்

**க. கவியரசன்**, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் கரு. முருகன்**
நெறியாளர், இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை மற்றும் உயராய்வு மையம்
தேவகோட்டை 630 303
(அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி, இணைவுப் பெற்றது)

**ஆய்வு நோக்கம்**

சங்ககாலத்தில் வாழ்ந்த நம் முன்னோர் ஐவகை நிலங்களையும், பண்பாடுகளையும் பகுத்து வாழ்ந்து வந்துள்ளனர். திணை என்பது நிலத்தையும் ஒழுக்கத்தையும் கூறுவதாக அமைகிறது. ஐவகை நிலத்தின் ஒழுக்கங்களாக குறிஞ்சி (புணர்தல்), முல்லை (இருத்தல்), மருதம் (ஊடல்), நெய்தல் (இரங்கல்), பாலை (பிரிதல்) என சங்க கால மரபு கூறுகிறது. வேறுபட்ட நிலத்தில் வாழ்ந்து பல பண்பாட்டினை ஆராய்ந்து ஒருங்கிணைத்து மக்கள் வாழ்ந்து வந்துள்ளதை சங்க இலக்கியங்களில் நம்மால் அறிய முடிகிறது. இவ்வாறு பண்பாட்டில் சிறந்து விளங்கிய மக்களுள் மருதத் திணை மக்களும் ஆகும். பிறத்திணை மக்கள் மட்டுமில்லாது மருதத் திணை மக்களும் அடுத்த தலைமுறைக்கு அதனை கடத்தவும் செய்துள்ளனர். இதில் பெண்கள் சிறந்து விளங்கியுள்ளனர். மருதத் திணைப் பெண்கள் தங்களின் சந்ததியினை வளர்ப்பதில் ஆர்வம் காட்டியுள்ளனர். அவர்களின் பண்பாட்டில் பெண்களின் ஆளுமை பெரிதாக காணப்படுகிறது. அவர்களின் ஆளுமையால் சமூகத்தில் பெரிதாகக் காணப்படும் குடும்பத்தை நிலை நிறுத்திச் செயல்படுத்தக் கூடியவர்களாக காணப்படுகின்றனர். மருதத் திணை வயலும் வயல் சார்ந்த இடமாக காணப்படுகிறது. இங்கு வாழும் பெண்களின் பண்பாட்டு முறையைப் பற்றி குறுந்தொகைப் பாடல் வழி காண உள்ளோம்.

**முதன்மைச் சொற்கள்**

சமுகம், சங்ககாலப் பெண் கல்வி, பெண்களின் தகுதி, மருதத் திணை, மருதப் பெண்கள், தலைமகள் நெறி, தோழியின் நெறி, விருந்தோம்பல்

**முன்னுரை**

உலகத்தில் வாழும் தமிழர்கள் காலங்காலமாக பண்பாட்டு அடையாளங்களைப் போற்றி வருகின்றனர். மனித சமூகத்தின் வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், மொழி, கலை, இலக்கியம், விழுமியம், சமூக நடத்தைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக பண்பாடு காணப்படுகிறது. இத்தகைய பண்பாடு மனித நடவடிக்கைகளை மையம் கொண்டது. நம் முன்னோர் பண்பாடுடன் வகுத்த திணையில் மருதத் திணையும் ஒன்றாகும். மருதத் திணையில் பெண்களின் பங்கு அளவுக்குரியது. அதனை, ஆராயும் பொருட்டு 'குறுந்தொகையில் சமூக பண்பாட்டு ஆய்வு நோக்கில் மருதப் பெண்கள்' என்று கட்டுரை அமைகிறது.

**சமுகம்**

காட்டில் வேட்டையாடி உயிர் பிழைத்து வாழ்ந்த மானுட சமூகம் சில கால கட்டத்தின் பிறகு ஓர் சமூகமாக மாறுதல் அடைகிறது. சமூகம் என்பதை அறிவது பொருட்டு, 'சமூகம் எனக் கொள்ளப்பட்டால் அதற்கு முந்தைய அநாகரிக சமூகமும், துவக்க கால காட்டுமிராண்டி சமூகமும் பற்றி அறிய பிற தொல்லியல், மானுடவியல் சான்றுகளையே நாட வேண்டியுள்ளது' என (கணபதி இளங்கோ பண்டையத் தமிழர் வாழ்வியல் பக்-3) குறிப்பிடுகிறார். சமூகத்தின் முக்கிய அங்கமாக குடும்பம் காணப்படுகிறது. இக்குடும்ப அமைப்பு அமைய திருமணம் முதன்மை ஆகிறது. அதனை 'மனித இனம் தன் பால் உந்துதலை ஒரு நிறுவன அமைப்பிற்குள் நிறைவு செய்து கொள்ள ஏற்படுத்திய முறையே திருமணம் ஆகும். (பண்பாட்டு மானுடவியல், பக்தவத்சலம், பக்-379) என்று திருமணம் பற்றிக் கூறுகிறார். சமூகத்தில் தாய் வழிச் சொத்துரிமை சங்க காலத்தில் அமைந்தது பற்றி, 'தாய்வழிச் சொத்துரிமை அடிப்படையிலான குடும்ப அமைப்பு முறைக்குள் இடம்பெறும் உறவு முறைகளாக தோழி, செவிலித்தாய், நாற்றாய் ஆகியோர் இருக்க முடியும். சமூகத்தின் இயக்கு சக்தியாக இருந்து முற்றிலும் புதிய ஒருவனுக்கு ஒருத்தி என்னும் தனிக்குடும்ப வடிவம் தோன்றக் காரணமாய் இருந்தவர்கள் இவர்களே' (கணபதி இளங்கோ, பண்டையத் தமிழர் வாழ்வியல், பக்-3) எனக் கூறுகிறார். இதன் வழி பெண்கள் சங்ககால சமூகத்தில் தங்களுக்குகென சூழல் அமைத்து வாழ்ந்திருப்பதை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

**சங்ககாலப் பெண் கல்வி**

சங்ககாலத்தில் பெண்கள் இயல், இசை, கூத்து என்னும் கலைகளில் தேர்ச்சிப் பெற்றவர்களாக விளங்கினர். ஆண்களின் கல்வியாகப் போர், தூது, காவல், பொருளீட்டல் ஆகியன காணப்படுகின்றன. பெண்கள் தங்களின் குடும்ப பாங்கு தன்மையை வளர்த்துக் கொண்டனர். ஆண், பெண் கல்வி முறை வேறுபட்டதாகிறது. திருமணத்திற்குப்பின் உதவும் வகையில் பெண்களின் கல்வி அமைகிறது. சங்க காலத்தில் தாய், தோழி, செவிலி என்பவரிடம் இருந்து குடும்பம் பற்றியக் கல்வி முறையை கற்றுக் கொள்கிறார்கள். குடும்பக் கல்வி மட்டுமில்லாது பெண்கள் இளமைக் காலத்திலே இயல், இசை, கூத்தில் சிறந்து விளங்கியுள்ளனர். அப்பெண்கள் முதுக் குறைவி என்று அழைக்கப்பட்டும் வந்து உள்ளனர். இதனை சிலப்பதிகாரம் கூறுகிறது. அவை,

**'சிறு முதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்'** (சிலம்பு கொலைக்காதை-68)

கண்ணகி சிறுமுதுக் குறைவி என அழைக்கப்பட்டமை சிலப்பதிகாரம் வழி அறிய முடிகிறது. இதன் வழி சங்க கால பெண்களின் கல்வி நிலைப்பாட்டினை அறிய இயலுகிறது.

**பெண்களின் தகுதி**

பண்டைய தமிழ் மக்களின் வாழ்க்கை நெறிமுறைகளை சங்க இலக்கியங்கள் நமக்கு இன்றும் கூறி வருகின்றன. பெண்கள் சங்க காலத்தில் வீரமிக்கவர்களாகவும், அரசர்களுக்கு அறிவுரை வழங்குபவர்களாக வும், வேண்டி வருவோருக்கு புன்முறுவலுடன் விருந்தோம்பல் செய்பவர்களாகவும், குடும்பத்தில் தனது ஆளுமையினை செலுத்தி சமூகத்தில் பெரும் பங்கு வசிப்பவர்களாக வும் விளங்குகின்றனர்.

பெண்களைப் பற்றி தொல்காப்பியர் கூறுகிறார். சங்ககாலத்தில் வாழ்ந்த பெண்கள் தங்களின் தகுதிகளை பெருக்கி வாழ்ந்து உள்ளனர். அவ்வாறான தகுதிகள் பற்றி தொல்காப்பியர் கூறுவன,

**செறிவு நிறைவுஞ் செம்மையுஞ் செப்பு**

**மறிவு மருமையும் பெண்பா லான**

(தொல். 209)

பெண்களின் உளப் பண்பாட்டினை தொல்காப்பியர் இவ்வாறு வகுத்துள்ளார். பெண்கள் செறிவு, நிறைவு, செம்மை, அறிவு, செப்புதல், அருமை போன்ற பண்பு நலப் பண்பாட்டில் சிறந்து விளங்கியுள்ளதை தொல்காப்பியர் வழி அறிய முடிகிறது.

**மருதத் திணை**

பண்டைய தமிழரின் ஐவகை நிலப்பரப்பில் மருதத் திணை ஒன்றாகும். அறிவின் பெருக்கத்தில் மருதத் திணை மக்கள் நிலங்களை உழுது, பயிரிட்டு வளமான சூழலை உருவாக்கினர். இவர்கள் உழவர், உழத்தியர் என்ற பெயர்களில் அழைக்கப்

பட்டனர். வேந்தனைக் கடவுளாக வணங்கி, பள்ளமான இடங்களில் நீர் தேக்கி விவசாயம் செய்தனர். அனைத்து உயிர்களுக்கும் தேவையான உணவை உற்பத்திச் செய்து வந்தனர். மருதத் திணையில் வாழ்ந்த ஆண், பெண் இருவரும் சமமாக வேலையைப் பங்கிட்டு காலச்சூழல் அறிந்து உற்பத்தியைப் பெருக்கினர். தலைவியின் ஆளுமைச் செயலால் குடும்பமும், தலைவனும் ஒழுங்கமைந்தப் பண்பாடு உடையவர்களாக விளங்குகின்றனர்.

**திருமகளும் மருதப் பெண்களும்**

மருதத்திணையில் பெண்களை முதன்மை யாகக் கொண்டு அவர்கள் கூறும் நெறியில் மருதத் திணை மக்கள் வாழ்ந்துள்ளனர். அவர் தெய்வத்திற்கு ஒப்பானவர்களாக கருதப்பட்டனர். தெய்வம் போல் மருதத் திணைப் பெண்கள் காணப்படுவதை குறுந்தொகைப் பாடல் கூறுகிறது.

அவை,

**பெரும் பூண் பொறையன் பேஎம் முதிர் கொல்லிக்**

**கருங்கட் தெய்வம் குடவரை எழுதிய**

**நல் இயல் பாவை அன்ன இம்**

**மெல் இயல் குறுமகள் பாடினள் குறினே**
(குறு.89: 4 -7)

மேற்கு நோக்கி இருந்த தெய்வத்திற்கு ஒப்பானவளாக தலைவி காணப்படுவதை இப்பாடலில் காணப்படுகிறது. மருதத் திணை மக்களின் பண்பாட்டில் பெண்கள் திருமகளுக்கு இணையானவர்களாக இருந்தமை உணர முடிகிறது.

**தலைமகள் நெறி**

**அ.பண்பாட்டில் களவு நிலை**

களவுக் கொண்ட மருதத் திணை தலைமகள் களவினை தெரிவிக்கும் விதமாக அமைந்த குறுந்தொகைப் பாடல்,

**மள்ளர் குழீஇய விழவினானும்**

**மகளிர் தழீ இய துணங்கை யானும்,**

**யாண்டும் காணேன், மாண் தக்கோளை;**

**யானும் ஓர் ஆடுகள மகளே; என்கைக்**

**கோடு ஈர் இலங்கு வளை நெகிழ்த்த**

**பீடு கெழு குரிசிலும், ஓர் ஆடுகள மகனே**
(குறு.31:1-6)

மருதத்திணை மகளிர் துணங்கைக் கூத்தினை ஆடும் பொழுது தமக்குரிய மள்ளருடன் சேர்ந்து ஆடுவார்கள். தலைமகன் அங்கு இல்லாமையால் தலைவி விழாவினைச் சிறப்புச் செய்யாமல் இருக்கிறாள். இதன் வழி தோழி தலைவியின் களவினை அறிகிறாள். தலைமகன் தவிர பிற ஆண்களுடன் ஆடாத தலைவியின் பண்பாட்டினைக் காணமுடிகிறது. தோழிக்குத் தன் களவை அறநெறியோடு கூடிய பண்பாட்டுடன் தலைவி வெளிப்படுத்துவதை அறிய முடிகிறது.

**ஆ. பண்பாட்டில் கற்பு நிலை**

மருதத் திணை தலைவிகள் தலைவனை அன்பு மிகுதியால் அரவணைப்புடன் கவனித்து வாழ்ந்து வந்துள்ளனர். வரைவு நிகழ்ந்த பிறகு தலைவன் பிரிந்து சென்று பொருள் தேடும் சூழல் நிகழ்கிறது. அவ்வாறு சென்ற தலைவனை எண்ணி தலைவியின் கண்கள் நீரை வெளிப் படுத்துகின்றன. இதனை குறுந்தொகைப் பாடல் வழி,

**நுண் உறை அழி துளி தலை இய**

**தண் வரல் வாடையும், பிரிந்திசினோர்க்கு அழலே** (குறு.35:4-5)

மருதத்திணைப் பண்பாட்டில் தலைமகள்கள் தன் தலைமகனை அரசர்களாக எண்ணி அவர்களையே வணங்கி வாழ்ந்து வந்துள்ளனர். அத்தகைய தலைவனை எண்ணி தலைவியின் கண்கள் அன்பு மிகுதியால் கண்ணீரை வெளிப்படுத்துகின்றன. மருதத் திணை மகளிர் தங்கள் சமூகப் பண்பாட்டை கடைப்பிடித்து வாழ்ந்து வந்திருப்பதை குறுந்தொகைப் பாடல் வழி அறிய முடிகிறது.

**தோழியின் நெறி**

**அ. பண்பாட்டில் மண முழவு**

தலைவியின் விருப்பம் அறிந்து தோழி தலைவனுடன் வரைவு செய்து வைக்க முயலுகிறாள். இதனை குறுந்தொகைப் பாடல் வழி,

**அட்ட மள்ளர் ஆர்ப்பு இசை வெரூஉம்**

**குட்டுவன் மரந்தை அன்ன எம்**

**குழை விளங்கு ஆய் நுதல் கிழவனும் அவனே** (குறு.34:5-7 )

தலைவன் விரைந்து மணம் முடிப்பான்.

அப்பொழுது ஏற்படும் இசை முழக்கத்தால் ஊர் ஆராவரிக்கும். தாய் மறுத்தாலும் உன்னை மணப்பவன் தலைவன் என தலைவியைத் தேற்றுகிறாள். தோழியானவள் அறத்தோடு நின்று தலைவன், தலைவி இருவரின் களவினையும் தாய்க்கு எடுத்துக் கூறி வரைவு செய்ய எண்ணுகிறாள். இருவரின் களவு நிலை வீட்டில் தெரியப் படுத்தும் பண்பாட்டினை அமைந்ததாக மருதத் திணை விளங்குகிறது.

**ஆ. பண்பாட்டில் சூளுரை**

சூளுரைகள் உரைப்பது மருதத் திணை மக்களிடம் காணப்படுகிறது. சூளுரைகள் உரைப்பதுடன் மட்டுமல்லாமல் அதனை நிறைவேற்றும் தன்மை உடையவர்களாகவும் விளங்கியுள்ளனர். தோழியிடம் தலைமகன் சூளுரைத்ததை குறுந்தொகைப் பாடல் வழி,

**ஒண் தொடி மகளிர் வண்டல் அயரும்**

**தொண்டி அன்ன என் நலம் தந்து**

**கொண்டனை சென்மோ - மகிழ்ந ! - நின் சூளே** (குறு.238:3-5)

களவுக் காலத்தில் தலைமகன் தோழியிடம் தலைவியை மணப்பதாக சூளுரைக்கிறான். வரைவு நிகழ்ந்த பின் வீட்டிற்கு வராமல் இருக்கும் தலைவன் தலைவியை சந்திப்பதற்கு தோழியிடம் வாயில் வேண்டுகிறான். தோழி அதனை மறுத்து அறத்தோடு அவன் கூறிய சூளுரையைக் கூறுகிறாள். பெண்கள் மருதத் திணையில் அறம் கூறும் பண்பாட்டில் சிறந்து விளங்கியுள்ளமையை நம்மால் உணர முடிகிறது.

**விருந்தோம்பல்**

விருந்தினருக்கு உணவு அளித்து மகிழ்ச்சிப் பெறுவதை மருதத் திணைப் பெண்களின் பண்பாடாக இருக்கிறது. மருதத் திணைக்கு வருபவர் உணவு உண்பதால் உடல் பருத்து விளங்குவதை தோழி கூறியுள்ளார்.

**தன் ஊர் மன்றத்து என்னன் கொல்லோ?**

**இரந்தூண் நிரம்பா மேனியொடு**

**விருந்தின் ஊரும் பெருஞ் செம்மலனே**

(குறு.33:2-4)

ஊர் மன்றத்தில் தங்கும் பாணன் வறுமையில் இருந்து மருதத் திணை மக்களால் மனநிறைந்த உணவைப் பெற்று வாழ்கிறான். வருவோரை வரவேற்று விருந்து வழங்கும் பண்பாட்டினைக் கொண்டவர் களாக மருதத் திணைப் பெண்கள் விளங்குகின்றனர்.

**முடிவுரை**

மருதத் திணையில் பெண்களின் ஆளுமை வெளிப்படுகிறது. மருதத் திணை இயற்கை வளம் நிறைந்த பகுதியாகும். அங்கு வாழக்கூடிய பெண்கள் திருமகளுக்கு ஒப்பாக கருதப்படுகிறார்கள். பெண்களை உயர்த்தி வணங்கும் பழக்கம் கொண்ட சமூகமாக மருதத் திணை காணப்படுகிறது. தலைவியானவள் களவு, கற்பு காலத்தில் அறம் கொண்டு விளங்குகிறாள். தோழியானவள் உண்மை தன்மையை விளக்கி, தவறு இளைப்பவரை நல்வழியில் கொண்டு செல்லும் பண்பைக் கொண்ட வளாக விளங்குகிறாள். மருதத் திணையில் பெண்கள் விருந்தினை வழங்கி சிறப்பு பெறுவதையும் 'குறுந்தொகையில் சமூகப் பண்பாட்டு ஆய்வு நோக்கில் மருதப் பெண்கள்' என்ற கட்டுரை வழி நாம் கண்டுள்ளோம்.

**துணைநூற் பட்டியல்**


1. முனைவர் வி நாகராசன் -குறுந்தொகை (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41 - பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098. முதல் பதிப்பு 2014
2. பக்தவச்சல பாரதி - பண்பாட்டு மானுடவியல், அடையாளம் பதிப்பகம், சென்னை – 14 மூன்றாம் பதிப்பு 2019.
3. கணபதி இளங்கோ - பண்டையத் தமிழர் வாழ்வியல், பாவை பப்ளிகேஷன்ஸ், அம்பத்தூர், சென்னை - 600 098, முதல் பதிப்பு 2014.
4. தொல்காப்பியம், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை – 113. முதல் பதிப்பு 2007.
5. சிலப்பதிகாரம் மூலமும் : அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், பதிப்பு 1985.